நித்ரா 2025 காலண்டர்
GET IT ON Google Play
Download on the App Store

# நித்ரா காலண்டரின்

# ஜோதிட மலர்

ஆன்மிக தேடலின் புதுமை !!

ஆடி 01 முதல் / 31 வரை



## ஆடி மாத ராசி பலன்கள்

## No.1 நித்ரா காலண்டர் வழங்கும்

## அம்மன் அருள் பொழியும்

# ஆடி மாதம்..!!

NITHRA APPS
Nithra Apps India Private Limited

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | ஆடிப்பட்டம் தேடி விதை | 02 |
| 02. | ஆடி மாதத்தில்.. என்ன செய்யலாம்? என்ன செய்யக் கூடாது?.. | 03 |
| 03. | ஆடி மாதத்தில் கூழ் ஊற்றுவது ஏன்? | 06 |
| 04. | ஆடி மாதத்தில் சுபகாரியங்களை தவிர்ப்பது ஏன்? | 07 |
| 05. | ஆடிப்பிறப்பன்று தேங்காய் சுடுவது ஏன்? | 09 |
| 06. | ஆடி செவ்வாய்.. ஆண்களுக்கு அனுமதியில்லை.. பெண்கள் மட்டும் கடைபிடிக்கும் விரதம்! | 12 |
| 07. | ஆடி வெள்ளிக்கிழமையில்.. செல்வ வளம் தரும் அம்மனை வழிபட தவறாதீர்கள்..!! | 14 |
| 08. | ஆடி மாத ஞாயிற்றுக்கிழமை ஏன் சிறப்பு பெறுகிறது? | 17 |
| 09. | ஆடிப்பெருக்கு பற்றிய புராணக்கதை...!! | 19 |
| 10. | ஆடி கிருத்திகை.. குறைகள் அனைத்தும் நீங்க... முருகனை வழிபடுங்கள்...!! | 23 |
| 11. | ஆடி அமாவாசை.. விரதம் இருப்பது எப்படி? | 24 |

# பொருளடக்கம்


12. நாகருக்கு சர்ப்ப வழிபாடு செய்வது ஏன்? 26

13. ஆடிப்பூரத்தில் அம்மனுக்கு வளைகாப்பு..!! 28

14. ஆடி மாதத்தில் அம்மன் வழிபாடு..
இரவில் நிகழும் அதிசயம்..!! 30

15. தீர்க்க சுமங்கலி வரம் தரும் வரலட்சுமி விரதம்..!! 32

16. சகல சௌபாக்கியங்களையும் தரும்
மகா சங்கடஹர சதுர்த்தி 34

17. கிருஷ்ண ஜெயந்தி.. என்ன செய்யலாம்?
எப்படி விரதம் இருக்கலாம்? 36

18. ஆவணி அவிட்டம்..!! 38

19. ஆடி மாதம் சுபமுகூர்த்த தினங்கள் 41

20. சந்திராஷ்டம தினங்கள் 43

21. ஆடி மாத விரத தினங்கள் 45

22. ஆடி மாத ராசிபலன்கள் 48



தமிழ் மாதங்களில் ஆடி மாதம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. ஆடி மாதத்தை கற்கடக மாதம் என்றும் அழைக்கிறார்கள். மாதங்களைப் பொறுத்தவரை உத்திராயணம், தட்சிணாயணம் என இரு பிரிவுகள் உள்ளது. இதில் தட்சிணாயணம் புண்ணிய காலம் ஆடி மாதத்தில் துவங்குகிறது. ஆடி முதல் மார்கழி வரை தட்சிணாயண காலமாகவும், தை முதல் ஆனி வரை உத்திராயணம் காலமாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

தட்சிணாயணம் துவங்கும் ஆடி மாதத்தில் சூரியனில் இருந்து சூட்சும சக்திகள் வெளிப்படும். பிராண வாயு அதிகமாக கிடைப்பதும் ஆடியில்தான். ஜீவ ஆதார சக்தி அதிகம் உள்ள மாதமாகவும் இது கருதப்படுகிறது.

வேப்பிலையை அம்மனுக்கு சாற்றி வணங்குவதும், கூழ் ஊற்றுவதும் ஆடி மாதத்தில் நடக்கிறது. இதற்கு காரணம், ஆடி மாதத்தில் கிடைக்கும் வேப்பிலை கொழுந்துகளுக்கு அபார மருத்துவ, தெய்வீக குணம் உண்டு.

ஆடி மாதத்தில் பொதுவாகவே காற்று அதிகமாக வீசும். அந்த காலத்தில் எளிதில் ஜீரணிக்கக்கூடிய வகையிலான உணவுகள் (கூழ்) சாப்பிட்டால் ஆரோக்கியம் மேம்படும்.



# ஆடிப்பட்டம் தேடி விதை

ஆடிப்பட்டம் தேடி விதை என்பது பழமொழி. சித்திரை முதல் ஆனி வரை வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும். ஆடியில் காற்றுடன் மழையும் பெய்யும். அதனால் ஆடியில் விதை விதைப்பது நல்ல மகசூல் தரும் என்பது பன்னெடுங்காலமாக விவசாயிகளிடையே இருந்து வரும் நம்பிக்கை.

ஒரு விதை என்பது ஒரு துளி விருட்சம்! ஒரு பெரிய மரமானாலும் சரி, ஒரு சிறிய செடியானாலும் சரி, அது ஒரு விதைக்குள்தான் அடங்கி இருக்கிறது. விதையானது நல்லமுறையில் முளைத்து வருவதற்கு தகுந்த பருவக்காலம் வரை மண்ணுக்குள் பல வருடங்கள் கூட காத்து கிடக்கின்றது.

இந்த ஆடி மாதமானது விதைகளை விதைப்பதற்கு தகுந்த பருவநிலையாக இருக்கிறது. ஆடிப்பெருக்கு என சொல்லப்படும் ஆடி பதினெட்டாம் நாள் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு ஆடிப்பட்டத்தை உறுதிசெய்யும் என்பது நம்பிக்கை.

ஆடியும், விவசாயமும் ஒன்றுடன் ஒன்று பிரிக்க முடியாதவை. ஆடியில் காத்தடித்தால் ஐப்பசியில் மழை பொழியும் என்பதை முன்னோர்கள் கணித்து ஆடிப்பட்டம் தேடி விதை என்றனர். வானம் பார்த்த பூமியில் பயிரிடும் விவசாயிகள் ஆடிப்பட்டம் எப்போது வரும்? என காத்திருப்பர்.

ஆடியில் விதைத்தால்தான் மழை பொழிந்து பயிர் நன்றாக செழித்து வளரும். அத்துடன் பிராண வாயும், ஜீவ ஆதார சக்தியும் அதிகம் உள்ள மாதமான ஆடி மாதத்தில் விதையை விதைப்பார்கள்.

அர்ஜூனனை கர்ணனின் மீது அம்புகள் ஏவச் சொன்னார். இந்திரன், கர்ணனின் கவச குண்டலங்கள் தானமாகப் பெற்றுக் கொண்டபடியால், தெய்வீகக் கவசம் இல்லாத கர்ணனின் மீது செலுத்தப்பட்ட அர்ஜூனனின் கூரிய அம்புகள் கர்ணனின் நெஞ்சைச் சல்லடையாக துளைத்தன. அதனால் கர்ணன் போரில் மடிந்தான்.

அதர்மம் அழிக்கப்பட்டு, தர்மம் நிலைநாட்டப்பட்ட இந்த நாள் தான் பதினெட்டாம் போர் என்று அழைக்கப்படும் ஆடி 18ஆம் நாளாகும்.

## ஆடி கிருத்திகை.. குறைகள் அனைத்தும் நீங்க... முருகனை வழிபடுங்கள்...!!

திதிகளில் சஷ்டி, நட்சத்திரங்களில் கிருத்திகை, கிழமையில் செவ்வாய் ஆகியன முருகப்பெருமானை வழிபட்டு, அவருடைய பரிபூரண அருளை பெறுவதற்கு ஏற்ற நாட்களாகும்.

குழந்தை இல்லாதவர்கள் சஷ்டி திதியிலும், திருமண வரம் வேண்டுவோர் கிருத்திகை நட்சத்திரத்திலும், செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் செவ்வாய் கிழமையிலும் முருகனை விரதம் இருந்து வழிபட்டால் விரைவில் கை மேல் பலன் கிடைக்கும். இந்த கிருத்திகை நட்சத்திரம் ஆடி மாதத்துடன் சேர்ந்து வரும் போது இன்னும் அதிக சிறப்பு பெறுகிறது.



# ஆடி மாத ராசிபலன்கள்



## விடாப்பிடியாக செயல்படும் மேஷ ராசி அன்பர்களே..!!



சூரியன் 04ல் இருப்பதால் அரசியல்வாதிகளுக்கு சாதகமான சூழல் ஏற்படும். தனிப்பட்ட ஆசைகள் மற்றும் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள்.

செவ்வாய் 05ல் இருப்பதால் பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சனைகள் குறையும்.

செவ்வாய் ஆடி 13ல் இருந்து 06ல் இருப்பதால் புதிய விஷயங்களில் ஆர்வம் ஏற்படும். சந்தேக உணர்வுகளால் நெருக்கமானவர்களிடம் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு நீங்கும்.

புதன் 03ல் இருப்பதால் வழக்கு விஷயங்களில் சாதகமான சூழல் அமையும்.

புதன் ஆடி 18ல் இருந்து 04ல் இருப்பதால் வீட்டில் மனதிற்கு பிடித்த விதத்தில் சிறு சிறு மாற்றங்களை செய்வீர்கள். தாய் வழியில் ஒற்றுமை ஏற்படும்.

சுக்கிரன் 02ல் இருப்பதால் வரவுகள் மூலம் கையிருப்புகள் அதிகரிக்கும்.

சுக்கிரன் ஆடி 10ல் இருந்து 03ல் இருப்பதால் திட்டமிட்ட பணிகளில் அலைச்சல்கள் அதிகரிக்கும்.சகோதர வழியில் ஒத்துழைப்புகள் உண்டாகும்.

குரு 03ல் இருப்பதால்  விமர்சன பேச்சுக்கள் தோன்றி மறையும்.

சனி 11ல் இருப்பதால்  புதுவிதமான இலக்குகள் பிறக்கும்.

ராகு 11ல் இருப்பதால்  விலகி இருந்த உறவினர்கள் விரும்பி வருவார்கள்.

கேது 05ல் இருப்பதால் பணிகளில் இருந்து வந்த மறைமுக எதிர்ப்புகளை அறிவீர்கள்.

**வழிபாடு**: சிவபெருமானை வழிபாடு செய்துவர எதிர்காலம் சார்ந்த தெளிவுகள் ஏற்படும்.